சுருக்கம்

பொதுப்பணிகள் - இணைக்கல்வித் தகுதி நிர்ணயம் – பள்ளி மேல்நிலைப் படிப்பு (+2) முடித்து, திறந்தவெளிப் பல்கலைக்கழகங்களில் பெறும் பட்டயம் / பட்டம் / முதுகலைப்பட்டங்கள் – பொதுப்பணிகளில் நியமனம் பெற அங்கீகரித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை

அரசாணை (நிலை) எண். 107

நாள்: 18–08–2009

ஆவணி 2,
திருவள்ளுவர் ஆண்டு 2040

படிக்க:

1) அரசாணை (நிலை) எண் 180, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள் 11–09–2000.
2) பி.எஸ்.என்.எல். நிறுவன தமிழ்நாடு வட்ட தலைமைப் பொது மேலாளரின் கடித எண். ஆர்.இ.டி. / 301–6/2004, நாள் 17–07–2004.
3) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலரின் நே.மு.க. எண். 1745/ஆர்.என்.டி. – எப் 1/ 2007, நாள் 05.04.2007.
4) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய இணைச் செயலரின் நே.மு.க. எண். 5280/ஆர்.என்.டி. – எப் 1/ 2007, நாள் 27–09–2007.

*****

ஆணை:

மேலே ஒன்றில் காணும் அரசாணையில், பல்கலைக்கழக மான்யக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களால் திறந்த வெளிப் பல்கலைக்கழக முறை மூலம் வழங்கப்படும் பட்டயப் படிப்பு, பட்டப்படிப்பு மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்புகளை, அப்பல்கலைக்கழகங்களால் முறையாக (Regular Stream) வழங்கப்படும் பட்டயப் படிப்பு, பட்டப்படிப்பு மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்பு ஆகியவற்றிற்குச் சமமாகக் கருதி பொதுப்பணிகளில் வேலைவாய்ப்பிற்கு அங்கீகாரம் அளித்து ஆணையிடப்பட்டது.

2. பி.எஸ்.என்.எல். நிறுவன தமிழ்நாடு வட்ட தலைமைப் பொது மேலாளர் மேலே இரண்டில் காணும் கடிதத்தில், பள்ளி மேல்நிலைக் கல்வியில் தேர்ச்சி, குறைந்த பட்ச கல்வித் தகுதியாக நிர்ணயிக்கப்பட்ட ஒரு பணியிடத்திற்கு, பள்ளி மேல் நிலைக் கல்வித் தேர்வில் (+2) தேர்வடையாமல், திறந்தவெளிப் பல்கலைக்கழகங்களின் வழியாக இளம் அறிவியல், இளங்கலைப் பட்டங்கள் ( B.Sc., B.A., ) பெற்றவர்களை, பள்ளி மேல்நிலைக் கல்வித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் எனக் கருதி அரசுத் துறைகளில் பதவி உயர்வுகளுக்குத் தகுதி பெற்றவர்களாகக் கருதலாமா என விளக்கம் கோரியிருந்தார்.

3. மேற்கண்ட கருத்துருமீது இணைக்கல்வி நிர்ணய பரிசீலிப்புக் குழுவின் பரிந்துரையைப் பெற்று அனுப்புமாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழுவின் செயலர் கேட்டுக் கொள்ளப்பட்டார். இணைக் கல்வித்தகுதி நிர்ணயக் குழு, பள்ளி மேல்நிலைக் கல்வித் தேர்வில் தேர்ச்சி பெறாமல், திறந்த வெளிப்பல்கலைக்கழகங்களில் இளம் அறிவியல் மற்றும் இளங்கலைப் (B.Sc., B.A.,) பட்டம் பெற்றவர்களை, மாநில அரசின் +2 தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் எனக் கருதி, அரசுப் பணிகளில் பணி நியமனத்திற்கோ அல்லது பதவி உயர்வுகளுக்கோ கருத இயலாது எனப் பரிந்துரைத்தது. இக்கருத்துருவினை இணைக்கல்வி நிர்ணயக் குழுவின் பரிந்துரைக்காக மீண்டும் அனுப்பிய போதும், ஏற்கனவே எடுத்த தீர்மானத்தையே மீண்டும் வலியுறுத்தியது.

4. இப்பரிந்துரையினை அரசு கவனமாகப் பரிசீலித்து, இணைக்கல்வி நிர்ணய பரிசீலிப்புக் குழுவின் பரிந்துரையினை ஏற்றுக்கொள்ள முடிவெடுத்து, அதற்கிணங்க, பள்ளி இறுதித்தேர்வு (பத்தாம் வகுப்பு) மற்றும் பள்ளி மேல்நிலைக் கல்வித் தேர்வு (+2) ஆகியவைகளில் தேர்ச்சி பெற்றப்பின், திறந்தவெளிப் பல்கலைக்கழகங்களின் வழியாகப் பெறப்படும் பட்டயம் / பட்டம் / முதுகலைப் பட்டங்களை மட்டும் பொதுப்பணிகளில் நியமனம் / பதவி உயர்வு பெற அங்கீகரித்து ஆணையிடுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி )

கே.என். வெங்கட்ரமணன்
அரசு செயலாளர்

பெறுநர்
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை – 2.
தலைமைப் பொது மேலாளர், பி.எஸ்.என்.எல், தமிழ்நாடு வட்டம்,
எண். 80, அண்ணா சாலை, சென்னை - 2.

<u>நகல் :-</u>

பதிவாளர், சென்னைப் பல்கலைக்கழகம் / அண்ணாமலைப் பல்கலைக்கழகம் / மதுரை காமராசர் பல்கலைக்கழகம் / தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகம்.
அனைத்துத் துறைத் தலைவர்கள் (மாவட்ட ஆட்சியர்கள் உட்பட).
அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள், சென்னை – 9.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9.
மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 9.
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
அரசுச் செயலரின் தனிச் செயலர், ப.ம.நி.சீ.துறை, தலைமைச் செயலகம், சென்னை – 9
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையிலுள்ள அனைத்துப் பிரிவுகள், தலைமைச் செயலகம், சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (நி.சீ –II) துறை, தலைமைச் செயலகம், சென்னை – 9.
இ.கோ / ந.கோ

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்
18.8.09